4th November 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கைப்பாணிக் குப்பம் வரை ரோடு போட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை நேரில் பார்த்துச் சொல்கிறார்களா அல்லது ரிப்போர்ட்டில் இருந்து பதில் சொல்லுகிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கனம் அங்கத்தினர்களுடைய ஒவ்வொரு கேள்விக்கும் அமைச்சர்கள் நேரில் சென்று பார்த்துப் பதில் சொல்வது என்பது இயலாது.

பாலமான் கால்வாய் மீது மதகு

*420 கேள்வி.—**திரு. சி. சிவசுப்ரமணியன்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில், சிதம்பரநாதன் பேட்டை கிராமத்திற்கு நடராஜபுரம் ரோட்டிலிருந்து பாலமான் வாய்க்காலைக் கடந்துபோக ஒரு மதகு கட்டிக் கொடுக்க வேண்டி அரசாங்கத்திற்கு ஏதேனும் விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை. ஆனால் மாவட்ட வளர்ச்சி மன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்துள்ளது.

(இ) இந்தப் பணியை எந்தத் திட்டத்தின் கீழும் தற்பொழுது எடுத்துக்கொள்ள இயலாது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION.

RELIEF TO FISHERMEN AND OTHER VICTIMS OF CYCLONE.

* **திரு. இராம. அரங்கண்ணல்** : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விஷயத்தை விவாதிப்பதற்காக சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி நான் கொண்டு வந்திருக்கின்ற பிரேரேணையின் குறிப்பைப் படிக்க விரும்புகிறேன்.

"நேற்றைய கோரப் புயலின் காரணமாகச் சென்னை மாநகரமே அவதிக்குட்பட்டிருக்கிறது என்றாலும், ஆங்காங்கு உள்ள குடிசைவாழ் பகுதிகள் யாவும், புயலாலும் மழையாலும் நாசமாயிருக்கின்றன. கடலோரங்களில் வாழும் மீனவர்களுடைய குடிசைகள் போய் ஒண்ட இடமில்லாமல் உணவுக்கு வழியில்லாமல் அவதிப்படுகின்றனர். அவதிப்படும் ஏழை மக்க

[திரு. இராம. அரங்கண்ணல்] [4th November 1966

ளுக்கு அரசு வேண்டிய—செய்ய இருக்கின்ற நிவாரண உதவிகள் பற்றி விவாதிக்க விரும்புகிறேன்" என்பதுதான் என்னுடைய பிரேரணையாகும். ஓரிரு கருத்துக்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றையதினம் நடைபெற்ற புயலின் விளைவுகளைப்பற்றி அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக, சென்னையிலே, அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியான மயிலாப்பூரிலே, மீனவ மக்களுடைய குடிசைகள் பெருமளவுக்கு நாசமாகியிருக்கின்றன. அவர்களுக்கு என்ன நிவாரணம் அளிக்க இருக்கிறோம் என்பது விளங்கவில்லை. இதைத் தவிர மயிலாப்பூர் பகுதியில் 60-க்கு மேற்பட்ட குடிசை வாழ் பகுதிகளில் ஏராளமான குடிசைகள் பிய்ந்து போய் மக்கள் கார்ப்பரேஷன் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் தனிப்பட்டவர்களிடமிருந்து உணவு வசதிகளைப் பெற்று இருந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே அரசாங்கத்தின் பொறுப்பு அதிகமாக இருக்கிறது. குடிசைகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கலெக்டரிடம் கேட்டால் 10 ரூபாயும், கார்ப்பரேஷன் 10 ரூபாயும், ஆக 20 ரூபாய் கிடைப்பதற்குக் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே, உடனடியாக ஹவுசிங் போர்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டு ஆங்காங்கு அந்த ஏழை மக்களுக்கு ஷெல்டர் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பெரும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது. அரசாங்கத்தினுடைய அனுதாபம் ஏழை வாழ் மக்களுக்கும், குடிசைவாழ் மக்களுக்கும் இருக்கிறது என்று சொன்னாலும் இந்தத் துறையில் அவசரம் அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதோடு, ஃபிஷர்மென் கம்யூனிடியைப் பொருத்த அளவில் அவர்களுக்காக ஃபாமின் ரிலீஃப் என்று ஒரு லட்சம் ரூபாய் வைத்திருக்கிறார்கள். இன்னும் 15 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த ஃபாமின் ரிலீஃப் நிதியிலிருந்து பிஷரீஸ் டிப்பார்ட்மெண்ட் மூலமாக அந்த மீனவர்களுக்கான உதவிகளைச் செய்ய வேண்டும். இந்த விவரங்களை எல்லாம் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்தச் சபையின் நடவடிக்கையைச் சிறிது நேரம் ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, தகவல் தெரிந்து கொள்ள ஒத்திவைப்புப் பிரேரணை பிரேரிப்பது வழக்கமல்ல. ஏதாவது அரசாங்கம் செய்யத் தவறி விட்டால், அல்லது ஏதாவது ஒரு சம்பவம் நடந்திருந்தால் அதைப் பற்றி விவாதிக்க ஒத்தி வைப்புப் பிரேரணை கொண்டு வரலாம். புயல் காற்றைப் பற்றி விவாதிக்கலாம். எப்படி வந்தது, ஏன் வந்தது என்று விவாதிக்கலாம். புயல் காற்று சட்ட மன்றக் கூட்டத்திற்கே தடை விதித்து விட்டது. புயல் காற்றைப் பற்றி விவாதிப்பதில் பயன் இல்லை. அது நம்முடைய சட்ட மன்றத்தினுடைய விதிகளுக்கோ, ஆட்சிக்கோ, அதிகாரத்திற்கோ உட்பட்டதல்ல. புயல் திடீரென்று பலமாகத்தான் ஏற்பட்டது. கடற்கரையிலிருந்து மூன்று மைலுக்கு அப்பாலுள்ள கப்பலே ஒன்று உடைபட்டது.

4th November 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

மக்கள் சேதம் அடைந்தார்கள். கோரமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதனால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும், தக்க உதவிகள் செய்ய வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகிறோம். கடலோரத்தில் ஜீவிக்கின்ற மக்கள் ஆபத்தைப் பொருட்படுத்தாது, மக்களுக்காகப் பாடுபடுகின்ற மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேற்று இந்த மன்றம் முடிந்த உடனே நான் கலெக்டர் அவர்களையும், டைரக்டர் ஆப் பிஷரீஸ் அவர்களையும் அழைத்துப் பேசி, அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சென்று சுற்றிப் பார்த்து எத்தகைய நிவாரணம் அளிக்க வேண்டும், என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பார்த்துச் செய்யச் சொல்லி இருக்கிறேன். நிதி இருக்கிறது, என்ன செலவானாலும் நிதியிலிருந்து செலவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறேன். அவர்களும் உடனடியாகச் சென்று சுற்றிப் பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நேற்று அந்தப் பகுதிகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கலெக்டரிடம் கூறியிருக்கிறார்கள். இன்று காலையில் உணவுத் துறை அமைச்சர் கேள்வி நேரத்தில் வராததற்குக் காரணம், அவர்கள் இப்போதும் ஆங்காங்கு சுற்றிப் பார்த்து என்ன நிவாரணம் உடனடியாகச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். நானும் என்னுடைய சட்டசபை வேலை முடிந்த பிறகு நேரில் சென்று பார்த்து மேலும் என்ன நிவாரணம் அளிக்கலாம் என்று பார்த்து அளிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் மீது முதன்மையான கவனம் செலுத்தி உடனடியாக இன்றைக்கு நிவாரணம் அளிப்பதோடு நிரந்தரமான அளவுக்கு நிவாரணம் அளிப்பதில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: புயலைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க முடியாவிட்டாலும் ஏற்பட்ட விளைவுகளைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். நேற்று அடித்த புயல் பெரு மழை காரணமாக எங்கெங்கு எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விவரங்களும், உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதைப் பற்றியும் இந்த மன்றம் அறிந்துகொள்ள விரும்புவதில் பொறுப்பு இருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் இந்தத் தொடர் கூட்டத்திலேயே அதைப் பற்றிய முழு விவரங்களையும் மன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அதைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்க வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அத்தகைய ஒரு அறிக்கையை வைக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது பற்றியும் தகவல் சேகரிக்கப்பட்டு வருகிறது. மழை நின்று விடும் என்று நினைத்தேன். ஆனல் மேலும் தொடர்ந்து மழை பெய்கிறது. எல்லாத் தகவலையும் தெரிந்து கொண்டு 7-ஆம் தேதி அல்லது 8-ஆம் தேதி விவரங்களைத் தெரிவிக்க ஒரு ஸ்டேட்மென்ட் ரெவின்யூ அமைச்சர் அவர்களோ அல்லது வேறு யாராவது ஒரு அமைச்சரோ கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : Consent is withheld.

III.—ANNOUNCEMENTS.

(1) POSTPONEMENT OF CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER : Notice under Rule 41 is postponed, because the Minister concerned is absent. It will be taken up tomorrow.

IV.—PRESENTATION OF REPORT.

REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE ACCOUNTS OF THE MADRAS STATE HOUSING BOARD FOR 1962–63.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை குறித்த இக்குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன்.

V.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1963–64—PRESENTATION.

MR. SPEAKER : Now the Hon. Chief Minister will present the Demands for Grants for Excess Expenditure.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டின் மிகைச் செலவுக்கான (Excess expenditure) மானியத் தேவைகளின் விவர அறிக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இவற்றுள், சில மானியங்களின் செலவினங்கள் அந்த ஆண்டுக்கென இறுதியாக அனுமதிக்கப்பட்ட தொகைகளின் அளவுக்குமேல் செலவழிக்கப்பட்டிருப்பதாகக் காணப்பட்டுள்ளன. அச் செலவினங்களை இந்த விவர அறிக்கையில் காணலாம்.

1965-66-ம் ஆண்டின் பொதுக்கணக்குக் குழுவினர் இந்த மிகைச் செலவினங்களைப் பரிசீலனை செய்து, தமிழ் நாடு அரசாங்கத்தின் 1963-64-ம் ஆண்டுக் கணக்குகள் மீதான தங்கள் அறிக்கையின் 22-வது பாராவில், அந்த அறிக்கையின் 7-ம் இணைப்பில் கண்டுள்ள மிகைச் செலவு மானியத் தேவைகளைச் சட்டப் பேரவையின் இசைவிற்காக அதன் முன் வைக்க வேண்டுமெனப் பரிவுரை செய்துள்ளனர். அக் குழுவினரின் கருத்துப்படி 1963-64-ம் ஆண்டின் மிகைச் செலவுகளுக்கான மானியத் தேவைகளை உங்கள் முன் வைக்கிறேன். இந்த விவர அறிக்கையின் இணைப்பில், ஒவ்வொரு செலவினம் குறித்தும் ஏற்பட்ட மிகைச் செலவிற்கான